**REVISED**

**செய்தி வெளியீடு எண்: 437** **நாள்: 25.07.2012**

## செய்தி வெளியீடு

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, கோடநாட்டில், கோடநாடு காட்சிமுனையில் அமைக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் இந்தியாவின் ஏ.டி.எம். மையத்தினையும், புதுப்பிக்கப்பட்டு, கணினிமயமாக்கப்பட்ட ஈளாடா கிளையினையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இன்று (25.7.2012) திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அங்கே குழுமியிருந்த பொதுமக்களிடையே உரையாற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் இந்தியாவின் கோடநாடு காட்சிமுனை ஏ.டி.எம். மையம், கோடநாடு நிர்வாகத்திற்குச் சொந்தமான இடத்தில், கோடநாடு நிர்வாகத்தால் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டடத்தில் அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பாங்க் ஆப் இந்தியாவின் செயல் இயக்குநர் திரு. எம்.எஸ். ராகவன் உட்பட பல்வேறு அலுவலர்களும், ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை
நாள்: 25.7.2012